

# பிரதமரின் மக்கள் நிதி திட்டம்

ஜனவரி 24, 2015

அன்பார்ந்த நண்பர்களே,

பிரதமரின் மக்கள் நிதி திட்டத்தின் கீழ் உங்களின் சிறப்பான பணியினை பார்க்கும் போது நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். அனைத்துக் குடும்பங்களுக்கும் வங்கிக் கணக்கு துவங்க வேண்டும் என்ற இலக்கு குறிப்பிட்ட நாளான ஜனவரி 26 க்கு முன்னதாகவே அடைந்து விட்டது. மிகக் குறுகிய காலத்திற்குள் 11.50 கோடி குடும்பங்களுக்கு புதிய வங்கிக் கணக்கு துவங்கி இருப்பதன் மூலம் நாட்டில் உள்ள 99.74 விழுக்காடு குடும்பங்களுக்கு வங்கிக் கணக்கு உள்ளது. நான் உங்களது இந்த மிகச் சிறப்பான பணிக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் இந்தப் பணியைத் துவங்கும் போது மிகக் குறுகிய காலமான ஐந்து மாதங்களுக்குள் எவ்வாறு குறிக்கோளை அடைய முடியும் என்று நமது திறமை பற்றிய சந்தேகம் பலருக்கும் ஏற்பட்டது என்பது உங்களின் நினைவுக்கு வரும். எனினும் நீங்கள் இந்தப் பணியை சிறப்பாகச் செய்ததன் மூலம் அவர்களின் சந்தேகம் தவறானது என்பதை நிருபித்துள்ளீர்கள்.இது உங்களை மட்டும் ஊக்குவிப்பதோடு மட்டுமல்லாது மற்றவர்களை ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது.

நமது பணி சரியாக துவங்கப்பட்டு பாதி நிறைவேறி உள்ளது. பிரமரின் மக்கள் நிதி திட்டமானது மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்துள்ளது. அடிப்படை வங்கிக் கணக்கின் மூலம் நாட்டில் உள்ள மக்களுக்கு கடன்,காப்பீடு மற்றும் ஓய்வூதிய சேவைகளை வழங்க வேண்டும். மேலும் வாடிக்கையாளர் சேவையில் உயர்ந்த தரத்தை பராமரிக்க வேண்டும்.இதுவே பிரதமரின் மக்கள் நிதி திட்டத்தின் அடுத்த இலக்கு ஆகும்.

நிதி தொடர்பான கல்வியறிவு ஏற்பட நாம் நமது முயற்சிகளை விரைவு படுத்த வேண்டும்.ஆதார் எண்ணை வங்கிக் கணக்கில் இணைப்பதை அதிகரிக்க வேண்டும். ரூபே கார்டு மற்றும் ஆதார் எண் அடிப்படையாகக் கொண்ட பணப் பரிவர்த்தனைகளை கிராமங்களில் வங்கிச் சேவையாளர்கள் மூலம் செயல் படுத்த வேண்டும். வங்கிக் கணக்குவைத்திருக்கும் அனைவரும் தங்கள் ஆதார் எண்ணை பெறுவதற்கும் அதை வங்கிக் கணக்கில் இணைப்பதையும் உறுதி செய்ய வேண்டும் என நான் விரும்புகின்றேன். இதை அனைத்து வங்கிக்கணக்குகளுக்கும் செய்து முடிக்க வேண்டும். இதை நீங்கள் வங்கிக் கணக்கு துவங்கும் போது காட்டிய அதே ஆர்வத்துடன் செய்து முடிப்பீர்கள் என நம்புகிறேன்.

வங்கிக் கணக்கு இல்லாததால் பெரும்பாலான வளர்ச்சி திட்டங்கள் தடைபடுகின்றன என நான் நம்புகிறேன். இப்போது நாம் அந்த தடையை நீக்கி விட்டோம். அரசின் உதவிகள் நேரடியாக வங்கிக் கணக்கில் சேர்க்கும் திட்டம் துவங்கி விட்டது. இதன் மூலம் அரசின் உதவிகள் மக்களுக்கு நேரடியாக சேர்வதோடு மட்டுமல்லாது வங்கிக் கணக்கை மக்கள் உபயோகப் படுத்தவும் ஏதுவாக அமையும்.

வலிமையான இந்தியாவை உருவாக்குவதில் உங்களுக்கு மிகப்பெரிய பங்களிப்பு உள்ளது. அரசின் உதவிகள் நேரடியாக மக்களுக்கு வழங்கும் திட்டம் மூலம் பல திட்டங்கள் செயல் படுத்தப்படும் என நான் உறுதி அளிக்கின்றேன்.

நாட்டில் உள்ள அனைத்துக் குடிமக்களும் தரமான வாழ்க்கை ஏற்படுத்த செயல்படுத்தப்படும் இந்த மகத்தான பணியில் பங்கு பெற்றிருக்கும் உங்களுக்கு என் நன்றிகளை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்த்துக்களுடன்,

தங்கள் உண்மையுள்ள,

**நரேந்திர மோடி.**